3rd March 1961]

முறையில் விற்பனை செய்ய, மற்ற மாகாணங்களுக்கு அனுப்புவ தற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் சொல்லுகிற காரணத்தினால் இந்தப் புகையிலை விற்பனையைக் கூட மார்கெட்டிங் கமிட்டியின் கீழ் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

SRI T. K. SUBBIAH : வட்டார வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அமோனியம் சல்பேட் கொடுக்கக்கூடிய திட்டத்தில் புகையிலைப் பயிருக்கு கொடுக்க முடியாது என்று வட்டார வளர்ச்சி அதிகாரி கள் சொல்லுகிறார்கள். புகையிலைப் பயிருக்கும் அமோனியம் சல்பேட் வழங்க சர்க்கார் உதவி புரியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ரசாயன உரம் பற்றாக்குறையாக இருக்கும் காரணத்தினால் முதலில் உணவுப் பொருள்களின் தேவைக்குத்தான் கொடுக்கப்படுகிறது. அதற்கு மேல் மிச்சம் இருந்தால் புகையிலைப் பயிருக்கும் கொடுக்கலாம்.

Flood

* 556 Q.—SRI A. VEDARATHNAM : கனம் பொது மரா மத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மத்திய அரசாங்கம் நிறுவியுள்ள வெள்ளக்கட்டுப்பாடு போர்டு மூலம் இம் மாநிலத்தில் வெள்ளத்தைக் கட்டுப்படுத்த ஏதேனும் திட்டம் உண்டா?

(இ) அப்படியானால், அதன் விவரமென்ன?

THE HON. SRI P. KAKKAN : (a) No, Sir.

(b) Does not arise.

SRI A. VEDARATHNAM : சமீபத்தில் டெல்லியில் நடந்த விவசாயக் கண்காட்சியில் சைனா முதலிய நாடுகளில் வெள்ளத்தி னால் சேதம் ஏற்படுவதற்குப் பதிலாக, அதைப் பயன் உள்ள முறை யில் பயன்படுத்துகிற முறைகளெல்லாம் அங்கே கையாளப்படுவ தாக காண்பிக்கப்பட்டதே? அத்தகைய முறைகளை ஆராய்ந்து அதை நம்முடைய மாநிலத்தில் அமுலுக்குக் கொண்டுவர அரசாங்கம் யோசிக்குமா?

THE HON. SRI P. KAKKAN : நமது மாகாணத்தில் வெள்ளம் ஏற்பட்டு அதனால் சேதம் உண்டானால், அம்மாதிரி சேதத்தைத் தடுப்பதற்கு இந்த மாநில சர்க்காரே தக்க ஏற்பாடுகள் செய்வ தற்குத் திட்டம் வைத்திருக்கிறார்கள்.

Grants (Colleges)

* 557 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state the number of private Colleges in Arts and Sciences and Engineering Colleges to which Government grants have been given during the last two years?